07.03.2024
RLT.OP.No.1/2022

ம.சா.1 சாட்சி தியாகராஜன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் திருமங்கலத்தில் குடியிருக்கிறேன். எனக்கு வயது தற்போது 83 என்றால் சரிதான். எனது மனைவிக்கு 65 வயது ஆகிறது என்றால் 63 வயது ஆகிறது. எனது மனைவி என்னைவிட 20 வயது குறைந்தவர் என்றால் சரிதான். எனக்கு மருத்துவ உபாதைகள் கிடையாது என்றால் சரிதான். எனது மனைவிக்கு இருதய அறுவை சிகிச்சை செய்ததற்கான மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மனைவியைவிட நான் வயோதிகமானவர் என்றால் சரிதான். எனது மனைவி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவருக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்து நான் எனது மனைவிக்கு 20.12.2011ம் தேதி தான செட்டில்மெண்டு ஆவணம் மூலமாக பாத்தியப்படுத்திய சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தில் தரைதளத்தில் 2 கடைகலும், மேல் தளத்தில் வீடும் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். தரைதளத்தில் உள்ள தரைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக கட்டினேன் என்றால் சரிதான். முதல் தளத்தில் உள்ள வீட்டையும் வாடகைக்கு கொடுப்பதற்காகத்தான் கட்டினேன் என்றால் சரிதான். கடந்த 15.04.2016ம் தேதி எதிர்மனுதாரர் மனுதாரர் இடையில் ஒரு பதிவில்லாத ஒத்தி பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். ஒத்தி தொகையாக ரூ.7,00,000/- எனது மனைவி

பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ம.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)